RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s1011

OPEN ACCESS

# மனாமியங்கள் காட்டும் அடித்தள மக்கள்

இரா. இராஜேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620022, தமிழ்நாடு, இந்தியா

# Working Class People, as Shown in "Manaamiyangal"

R. Rajeshwari [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Tiruchirappalli–620022, Tamil Nadu, India

* Corresponding Author: rajishanmugavel123@gmail.com

Received: 30-09-2021
Revised: 02-06-2022
Accepted: 08-06-2022
Published: 12-08-2022

Check for updates

**ABSTRACT**

Salma's novel, Manaamiyangal, is entirely about women. It is constructed based on society's conception of a feminine energy that entangles itself in the structures of time. It resounds as a voice of women's disenfranchisement. Many people around the world are praising the glory of women. Every woman in society is still living a life crushed by daily needs and her freedom. Rituals, rituals, and customs in some societies keep women at the boundary line. Some of these women break barriers and are shunned by society when they come out. Even though there are many atrocities against women in society, her family tries to do well but gets them into many problems. Salma mentions in the story Manaamiyangal that the reason for that was the society they lived in and its restrictions. Salma, who thinks about women from many angles, in her portrayal of Sajitha, intuitively conveys the legitimate dreams of girls in childhood. Women like Mehar live a quiet life, keeping in mind the family circumstances. But she struggles to make life better for her children. She illustrates the struggles of less literate women outside of the normal course of society. Generally, women, no matter how educated they are, remain dependent on a man because they believe that men are the protectors of women. Many social superstitions have restricted women in their activities. The thoughts of the people who have such superstitions should be changed. This article is going to discuss the lives of Muslim women, their economies, lives, thoughts, attitudes, and the social conditions that they are unable to recover from due to these social conditions.

**Keywords:** Working Class People, Salma, Manamiyangal, Struggles

## முன்னுரை

'மனாமியங்கள்' என்னும் நாவல் படைப்பாளர் 'சல்மா' அவர்கள் அடித்தள மக்கள் இஸ்லாமிய சமூகத்தில் எவ்வாறெல்லாம் வாழ்கிறார்கள் என்பதைக் கூறுகிறார். இஸ்லாத்தில் கூறும் நெறிமுறைகளை அவர்கள் பின்பற்றுவதும் அதில் பெண்களின் நிலை, அவர்களின் உரிமை அதனால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றை கதாப்பாத்திரங்கள் மூலம் படைத்திருக்கிறார். இலக்கியங்கள் என்பவை மனித வாழ்வின் காலக் கண்ணாடியாகத் திகழ்கிறது. அப்படிப்பட்ட இலக்கியத்தில் பாத்திரங்களில் பதிவிடும் போது அவை சமூகக் கருத்துக்களைப் பேசுவதாக அமைகிறது. சமூகத்தின் பதிவாகவும், விவாதங்களாகவும், வரலாற்று படைப்புகளாகவும் ஒரு படைப்பு மாறுவதற்கு சல்மாவின் 'மனாமியங்கள்' அடித்தளமாக அமைகிறது. ஏனெனில் சமூகத்தின் ஒரு அங்கமாக விளங்கும் பெண்கள் பற்றியும், அவர்கள் இஸ்லாமிய சமூகத்தில் படும் துன்பங்கள் பற்றியும், அடித்தட்டு மக்களின் இயல்பான நடவடிக்கைகள் பற்றியும், விவரித்து காட்சியமைத்திருக்கிறார். அதிலும் பெண்களுக்கு அதிகப்படியான கட்டுப்பாடுகளை விதித்து வாழ வைக்கின்றனர் (Udhayasuriyan et al., 2015). அப்படிப்பட்ட

இஸ்லாமியப் பெண்களின் வாழ்க்கையும், அவர்களின் பொருளாதாரம், வாழ்வு, எண்ணங்கள், மனப்போக்கு, இதோடு கூடிய சமூகச் சூழ்நிலைகளால் அவர்கள் கட்டுண்டு மீள முடியாமல் தவிக்கும் நிலைகளை இக்கட்டுரை விவாதிக்க உள்ளது.

## இஸ்லாமிய சமூகத்தில் பெண்கள்

பொதுவாக ஒரு சமூகத்தில் பெண்களின் வாழ்வை பொறுத்து அந்த சமுதாயம் மதிப்பிடப்படுகிறது என்பார்கள். அப்படி பிற சமூகத்தைக் காட்டிலும் அதிகமான கட்டுப்பாடுகள் நிறைந்திருக்கும். இஸ்லாமிய மதத்தின் சாதாரண குடும்பத்தில் பிறந்த மெஹர் சிறு வயதிலேயே திருமணம் செய்து வைக்கப்படுகிறாள். அவளால் கணவனின் கட்டுப்பாடுகளையும், குடும்ப சுமைகளையும், பொறுத்துக் கொள்ள முடியாமல் அல்லல்படுகிறாள். அவளுக்கு தாய் வீட்டிலும் அவ்வளவு வசதிகள் இல்லாததால் தாயின் இயலாமையால் அவள் புலம்பலை சமாளிக்க முடியாமல் துன்பப்படுகிறாள்.

மெஹரின் வாழ்க்கையில் பல்வேறு துன்பங்களையும், துயரங்களையும், அந்த சிறுவயதில் எதிர்க் கொள்ள முடியாமல் தடுமாறுகிறாள். ஊராரின் அவமதிப்பும், அவள் மனநிலையை மேலும் பாதிப்படைய செய்கிறது. இந்த பிரச்சனைகளை எதிர் கொண்டு வெளியில் வர அவளின் குடும்பப் பொருளாதாரமும், கல்வியும், சமூகமும், இடம் தரவில்லை. இப்படிப்பட்ட நிலையில் இன்றும் அடித்தள மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஒரு சாதாரண பொருளாதாரம் கொண்ட பெண்ணின் மனநிலையை சமூக மாற்றங்களோடு பொருத்தமாக அமைக்கப்பட்டுள்ளது.

## நியாயப்படுத்தும் கோட்பாடுகள்

மெஹர் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தாய் வீடு செல்கிறாள். கணவன் இரண்டாம் திருமணம் செய்து கொள்கிறான். வீடு மகிழ்ச்சி இழந்து இருக்கிறது. இந்த நிலையில் மெஹருவின் மாமியார் அழுது புலம்புகிறாள். நல்லா வாழ வேண்டியவள துரத்திவிட்டு வேறு ஒருத்தியை திருமணம் செய்து கொண்டு வந்த மகனைத் திட்டுகிறாள். மருமகளையும், எந்த வீட்டில இல்லாதது இங்க நடந்து விட்டது என்று கூறி அவளையும் கோபித்துக் கொள்கிறாள். பிறகு மனவருத்தம் தாங்காமல் யாரோ தன் குடும்பத்திற்கு செய்வினை செய்து விட்டதாகக் கூறி தன்னை தானே நொந்து கொள்கிறாள். தன் உறவினர்களோடு சென்று செய்வினை எடுக்கவும் செல்கிறாள். அப்படி அவள் சென்ற விவரம் அறிந்த ஹசன் தனது மரியாதையை இழந்ததாக எண்ணி “அல்லாவிற்கு இணை வைக்கலாமா?” என்று தாயைக் கண்டபடி திட்டித் தீர்க்கிறான்.

மதக் கோட்பாடுகளைப் பின்பற்றும் ஹசன் பெண்களின் மன நிலையையும், அவர்களின் உணர்வுகளையும், புரிந்துக் கொள்ளாதவனாகவே இருக்கிறான். தன் உணர்வுகளைப் பங்கிட்டுக் கொள்ளும் மனைவியின் முன் இரண்டாம் திருமணம் செய்து கொண்டு வந்து நிற்கிறான். அவளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளத் தெரியாத ஹசன் மதக் கோட்பாடுகளைக் கூறி தான் செய்யும் தவறுகளை நியாயப்படுத்துகிறான். இதுப்போன்ற நிகழ்வுகள் சமூகத்தில் பலரும் காணும் காட்சிகளே, இறைவன் பெயரைச் சொல்லி பலர் செய்யும் தவறுகள் ஹசனைப் போன்றவர்களாகவே கருதப்படுகிறார்கள்.

## பெண்களின் மனப்போக்கு

ஒவ்வொரு தாயும் தன் மகள் தன்னை விட உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்று நினைப்பது இயல்பானதே, அப்படியே மெஹரும் தன் மகள் சாஜிதாவை நன்றாக படிக்க வைக்க எண்ணினாள். தான் ஒரு வாழவெட்டியாக இருந்தாலும் தன் மகளை நன்றாகப் படிக்க வைத்து வேலைக்கு அனுப்ப எண்ணினாள். தன் கணவன் பற்றி “மெஹருக்குத் தெரியும், அவன் நீண்ட நாட்களாக சஜிதாவை மதரஸாவில் சேர்க்க வேண்டும். ஆலிமா பட்டம் பெற வைக்க வேண்டும் என்று கனவு கண்டது.” “எம் பொண்ணு வயசுக்கு வந்துட்டா, படிக்க அனுப்ப மாட்டேன் ஏதாவது தப்பு

தண்டாவுக்கு போயிடுங்க மதரஸாவுல ரெண்டு வருஷம் போட்டுட்டு இல்ம மரியாதைய கத்துகுடுத்து, இல்மு தெரிஞ்ச மாப்பிள்ளைக்கு கட்டிக் குடுத்தரணும்" என்பான். (Salma, 2021) இப்படியாக எண்ணிய தன் கணவனிடமிருந்து மகளைக் காத்து ஒரு பள்ளியில் சேர்க்கிறாள். அந்த ஊரில் உள்ள அஜரத் மற்றும் சமூகத்தார் அவளின் துணிச்சலை எண்ணி பதில் கூற முடியாமல், ஹசனை நினைத்தும் அவளால் இந்த பிள்ளைகளின் வாழ்வு இப்படி ஆனதை நினைத்தும் வருத்தப்படுகிறார்கள். ஒரு நடுத்தர பெண்களின் நிலையை மெஹார், சஜிதா, சுபைதா, பர்வின், சுலையம்மா குப்பி, கதீஜா, ஜெஸி போன்ற கதாபாத்திரங்களின் வழியாகக் காண முடிகிறது. அதுவே, கொஞ்சம் வசதிப் படைத்த வீட்டில் உள்ள ஆண்கள் தங்கள் குடும்ப பெண்களுக்கு சில கட்டுப்பாடுகளுடன் கூடிய மரியாதையும், சுதந்திரமும் கொடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களும் ஹசனின் இந்த கொடிய செயல்களுக்கு கண்டிக்க முடியாமல் தவிக்கிறார்கள் காரணம் ஹசன் கூறும் மதக்கோட்பாடுகள்.

ஹசனை எதிர்த்து பர்வினின் மகளிர் குழு செயல்பாடுகளும், சஜிதாவின் கல்வி பெறும் கனவும், மெஹருவின் வாழ்வும் ஒரு இன்னல் நிறைந்ததாகவே அமைந்திருக்கிறது. இதிலிருந்து அவர்கள் மீண்டு வரப்போராடும் பெண்களாகவே இருக்கிறார்கள்.

## நிறைவேறாத நியாயமான கனவுகள்

நம் கதையில் பெண்கள் தங்களுக்கான நியாயமான கனவுகளை நிறைவேற்றிக் கொள்ள போராடும் காட்சிகள் உண்மையின் இயல்பு நிலையில் இருந்து எழுதப்பட்டுள்ளது. பர்வீனின் கணவன் ஆண்மை இல்லாதவன் ஆனால் அவனை அவள் காட்டிக் கொடுக்காமல் வாழாவெட்டியாக, திருமணமாகியும் மலடி என்ற அவப்பெயருடனும், வாழ்ந்து வருகிறாள். அப்படி அவள் வாழவெட்டியாக இருக்கும் சூழலில் வேற்றுமதத்தைச் சார்ந்தவருடன் உதித்த காதலை வெளிப்படுத்த முடியாமல் தவிக்கிறாள். அவ்வளவு கட்டுப்பாடு கொண்ட சமூகத்தில் பெண்களின் உணர்வுகள் கட்டுபாட்டைத் தாண்டி வெளிவரும் என்பதற்கேற்ப பர்வீனின் காதல் நிகழ்வுகள் அமைந்துள்ளது.

ஆமீனா எழுபது வருடங்களாக முதிர் கன்னியாக, கண் தெரியாமல் வீடே உலகம் என்று வாழ்கிறாள். ஆசைக் கனவுகளைச் சொல்லக் கூட முடியாத நிலையில் வாழ்கிறாள். மெஹருவின் தாய் பெண் என்பவள் சமூகத்தில் தனியாக வாழவே முடியாது, வெளியில் தனியாக செல்ல முடியாது என்று கூறி மெஹருவுக்கு இரண்டாம் திருமணம் செய்கிறாள். இங்கு தான் பெண்கள் அவர்களுக்கான முடிவை அவர்களே எடுக்க முடியாத நிலை உருவாகிறது. ஒரு பெண்ணின் எந்த முடிவும் அவள் குழந்தை, கணவன், சுற்றத்தார்கள் பற்றியதாகவே அமைந்துவிடுவது மிகவும் வருத்தமளிப்பதாக இருக்கிறது. இதனால் அவர்களின் நியாயமான எண்ணங்களும், தேவைகளும், நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் கேள்விக் குறியாகவே வாழ்கிறார்கள் பெண்கள் என்பதில் ஐயமில்லை.

## வாழ்க்கைப் போராட்டம்

பெண்கள் அனைவரும் அவரவர் வாழ்க்கைக்குத் தகுந்தாற் போல் பல போராட்டங்களை எதிர் கொண்டு சிலர் வெற்றிப் பாதையில் பயணிக்கிறார்கள். சிலர் தோற்று, அந்த வாழ்வையே இழக்கிறார்கள். இப்படி பெண்களின் வாழ்வு நிலைகளின் அடிப்படையில் சுப்பிரமணியம் அவர்கள் மூன்று வகையாகப் பிரித்துக் காட்டுகிறார்கள்.

இருட்டில் உழன்று அதையே பழக்கப்படுத்திக் கொண்டவர்கள். என்றேனும் தங்களை நோக்கி வெளிச்சம் வராதா? எனக் காத்துக்கிடப்பவர்கள். வெளிச்சத்தை நோக்கி நடப்பவர்கள். என்று பெண்களின் நிலைகளைக் கூறுகிறார். இந்த ஆண் ஆதிக்கம் நிறைந்த சமூகத்தில் பெண்களின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியும் பல சவால்களை எதிர் கொண்டு வரும் வாழ்வாக அமைகிறது. இதுவே அவர்களுக்கு வாழ்க்கைப் போராட்டமாக மாறுகிறது.

## காலந்தோறும் பெண்கள் நிலை

சங்க காலம் முதல் தற்காலம் வரை பெண்கள் அடிமைப்பட்டு வாழ்கிறார்கள் (Rajam Krishnan, 1975). “சமண மதக் கோட்பாடும், தனியுடைமைச் சிந்தனையும், நாணம், கற்பு எனும் பண்புகளைப் பெண்ணுக்கு வற்புறுத்திக் கட்டுப்பாடுகள் விதித்துக் கடமைகளை வரையறுத்துத் தந்தையுரிமைச் சமுதாயத்தில் பெண்ணுக்கிருந்த இரண்டாவது உரிமை நிலையையும் பறித்தனர்” என்று விளக்குகிறார் சமூகவியலாளர் ச.ஃப்ரா பேகம். (Vasuki Rajaram, 2001)

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்

எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்

இளைப்பில்லை காண் என்று கும்மியடி”

என்று பாரதி பெண்ணின் விடுத்தலைப் பற்றி பாடுகிறார். அவரைத் தொடர்ந்து பாரதிதாசன் பெண்ணின் கல்வி குறித்தும், விடுதலை பற்றியும் பாடுகிறார்.

“கல்வியில்லாப் பெண்கள் களர்நிலம்

அந்நிலத்தில் புல் விளைந்திடலாம் - நல்ல

புதல்வர்கள் விளைதல் இல்லை”.

என்று அறிவிற் சிறந்த புதல்வர்களைப் பெற வேண்டுமானால் பெண்கல்வி அவசியம் என்பதைப் பாரதிதாசன் எடுத்துரைக்கிறார் (Bharathidasan, 2005).

## முடிவுரை

ஒவ்வொரு மதமும் அந்த மதத்தை பின்பற்றுபவர்களும், பெண்களும் எந்த தனிப்பட்ட கட்டுப்பாடுகளையும் புகுத்தவில்லை. அதனைப் பின்பற்றும் மக்கள் பெண்களைப் பாதுகாப்பதாகக் கூறி அவர்களுக்கு பல அநியாயங்களைச் செய்து வருகிறார்கள். அதனைத் துணிவோடு தன் படைப்பின் மூலம் எடுத்தாண்டுள்ள “சல்மா” அவர்கள் அடித்தள மக்களிடம் உள்ள பல பிரச்சனைகளைப் பல சூழ்நிலைகளில் கூறுகிறார்கள். குழந்தை திருமணம், மூடநம்பிக்கைகளைக் கொண்டிருக்கும் மக்கள் பெண்களைத் திருமணத்திற்காகவும், பிள்ளை வளர்ப்பிற்காகவும், படிக்க வைக்கும் அவலநிலை, முதிர்கன்னியின் ஏக்கம், காதல், குடும்பத்தில் பெற்றோர்களின் நெறி பிறழ்ந்த வாழ்க்கையால் குழந்தைகள் எவ்வாறு பாதிப்படைகிறார்கள். கல்வியைப் பெறத் துடிக்கும் சாதாரண குடும்ப பெண்ணின் நிலை. சுயவுதவிக்குழு மூலம் தன் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள நினைக்கும் பெண்கள். என்று அடித்தள மக்கள் பற்றிய வாழ்க்கை முறைகளைப் பெண்கள் மூலமாகவே காண முடிகிறது. இந்த நாவல் முழுவதும் பெண்கள், ஆணாதிக்கப் பிடியில் சிக்கித் தவிப்பதையே கூறுகிறது.

## References


Bharathidasan, (2005) Bharathiardasan Kavidhaikal, Vanathi Patthippagam, Chennai, India.

Rajam Krishnan, (1975) Kaalanthorum Pen, Thagam Veliyeedu, Chennai, India.

Salma, (2021) Manaamiyangal, Kalachuvadu Publication, Nagercoil, India

Udhayasuriyan, S., Sundaresan, C., Thilakavathi, K., (2015) Aaivu Kovai, Ananya Publications, Chennai, India.

Vasuki Rajaram, (2001) Ilakkiyathil Pengal, Sri Gajalakshmi Enterprises, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License